**இலங்கை தென் மேற்குப் பகுதியிலுள்ள நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிச் செயற்திட்டம் (கட்டம்- 01) - 2016**

இலங்கை தென் மேற்குப் பகுதியிலுள்ள நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முயற்சிச் செயற்திட்டத்தின் (கட்டம்- 01) 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 யூன் 01 ஆந் திகதிய சீஎல்கே 1013 - 01 கெ ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கும் முகவராக உள்ளது. வறுமைகளிற்கான கொள்கைகள் மற்றும் தந்திரோபாயங்கள் மற்றும் கடலமுக்கம் மற்றும் கடற்சுழற்சச்சி உயிரணுவியல் பராமரிப்பு என்பவற்றின் ஊடாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களிற்கான கழிவுநீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு முறைமைகளை விரிவாக்குதலும் 73,000 மக்களிற்கான சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை நுழைவு வசதிகள் என்பவற்றினை முன்னேற்றுவதுமே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,739.81 மில்லியனிற்கு சமமான யூரோ 107.70 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,224 மில்லியனிற்கு சமமான யூரோ 76 மில்லியன் கடனாகவும் ரூபா 991.81 மில்லியனிற்கு சமமான யூரோ 5.70 மில்லியன் மானியமாகவும் நிதியளிப்பதற்கு முகவர் பிரான்ஸ் டி அபிவிருத்தி வங்கியால் உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 4,524 மில்லியனிற்கு சமமான யூரோ 26 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக்

கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் மற்றும் மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(இ) கடன் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வு காலப்பகுதிக்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | 2016 திசெம்பர் 31 வரை பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | யூரோ மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏஎவ்டி- கடன் | 76.00 | 13,224.00 | - | - | - |
| - மானியம் | 5.70 | 991.81 | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 26.00 | 4,524.00 | 10 | 0.02 | 3.4 |
| **மொத்தம்** | **107.70** | **18,739.81** | **10** | **0.02** | **3.4** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது கழிவு நீர் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணம், கட்டிட இயலளவு நிகழ்ச்சித்திட்டங்களிற்காக தொழில்நுட்ப உதவி வழங்கல் மற்றும் வடிவமைப்பு மற்றும் பொறியியல் வேலைகளிற்கான ஆலோசனை வழங்கல் போன்றன உள்ளடங்கலாக நீர்கொழும்பு பகுதியில் சுகாதார உட்கட்டமைப்பு என்ற பெயருடைய 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. செயற்திட்டத்தின் மீளாய்வு காலப்பகுதியின் போது அமுலாக்கல் முகவர் செயற்திட்ட கண்காணிப்பு குழுவை தாபித்தல், ஆலோசனை சேவைகளை கொள்வனவு செய்தல் போன்ற ஆரம்ப படிமுறைகள் எடுத்திருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

2015 யூலை 28 ஆந் திகதிய எம்எவ்எஸ்/பிஏ/சீபி/15/148 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், நிதி அமைச்சானது கடன் உடன்படிக்கை கைசாத்திடுவதற்கு முன்னர் காணிச் சுவீகரிப்பு, சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தெளிவுகள் போன்ற செயற்திட்டத்திற்கு தேவையான சகல ஆரம்ப தேவைப்பாடுகளை உடுதிப்படுத்துவதற்கு முன்னாள் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிடமிருந்து ஒத்துழைப்பிற்கான விடயத்தை பெறவேண்டியிருந்த செயற்திட்ட பிரேரணையை அமுலாக்குவதற்கு உடன்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 வரையும் உரிய தரப்பினரிடமிருந்து சுற்றுச்சூழல் மற்றும் சமூக விடயங்கள் தொடர்பான தெளிவுபடுத்தலை பெற்றிருக்கவில்லை.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

-----------------------------------------------------------------

செயற்திட்டமானது 2016 திசெம்பர் மாதத்தில் 02 சிவில் பொறியியலாளர்களை சேர்த்திருந்த போதிலும், ‘‘:மொரட்டுவை மற்றும் எக்கல பகுதிக்கான குழாய் பொருத்தி சாக்கடை மேவுகை விரிவாக்கல் செயற்திட்டம்’’ என்று அழைக்கப்பட்ட வேறு செயற்திட்டத்திற்கு 2017 சனவரியிலிருந்து அத்தகைய உத்தியோகத்தர்களை விடுவித்திருந்தது.